# தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு) தூத்துக்குடி -2

## பால் சேகர வாகனம் ஒப்பந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் 2022-23

1. ஒரு ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் ஒரு பால் வழித்தடத்திற்கு மட்டுமே ஒப்பந்தம் கோர முடியும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒன்றுக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் ஒப்பந்தம் கோரினால் அது நிராகரிக்கப்படும் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.

2. ஒப்பந்தம் பெறப்பட்ட வாகனத்தில் வெயில், வெப்பம் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் பாலின் தரம் மற்றும் சங்க, ஒன்றிய இதர இனங்களின் பொருட்களுக்கு ஊறு விளைவிக்கா வண்ணம் ஊர்தியின் மூன்று பக்கவாட்டிலும், மேல் கூரையும் முழுமையாக இயற்கை இடர்பாடுகளின் தாக்கம் ஏற்படாவண்ணம் தார்பாலினால் பராமரிக்கவும். அவ்வாறு மேல கூரை இல்லாமல் உரிய கால அட்டவணைப்படி வாகனம் இயக்கினாலும் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் அபராதமாக வாகன வாடகை ஒப்பந்தத் தொகையில் பிடித்தம் செய்யவும், பால் தரம் குறைவு மற்றும் இதரப் பொருட்களுக்கான இழப்பீடு முழுமைக்கும் உரிய தொகை முழுவதும் வசூல் செய்யவும் ஒப்புக் கொள்கிறேன்.

3. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்திற்கும் அதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட எடை, திறன் அளவிற்கு பால் கேன் மற்றும் ஒன்றியத்தில் அனுப்பப்படும் இதர பொருட்கள் அவசியம் ஏற்றிச் செல்ல வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒப்பந்தப்படி அதிகபட்ச எடை, திறன் அளவிற்கு, அதிகமான எடை, திறன் அளவுள்ள வண்டிக்கு ஒப்பந்தம் கோரி பெற்றிருந்தால், அதே வண்டியை ஓட்டி பால் அதிகமாகும் பட்சத்தில் வண்டியினுடைய முழுத் திறன் அளவிற்கும் அதிக கட்டணம் இன்றி பால் சேகரம் செய்து வரவும் ஒப்புக் கொள்கிறேன்.

4. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்தில் பக்கவாட்டில் இரு பக்கமும் முன்புறம் மற்றும் பின்புறமும் ஒன்றியத்தின் பெயர் மற்றும் சின்னத்தினை ஒன்றியம் குறிப்பிடும் அளவில் என் சொந்த செலவில் செய்ய வேண்டும் என்பதற்கு சம்மதிக்கிறேன்.

5. இவ்வலுவலகத்தின் மூலம் நிர்ணயம் செய்யப்படும் வழித்தடத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி பால் சேகரம் செய்யப்பட வேண்டும் என்பதையும், தவறினால் கால தாமதமாக பால் சேகரம் செய்யப்படுமாயின் கெட்டுப் போகும் பாலின் கிரையத் தொகையை ஒப்பந்தக்காரரிடமிருந்து முழு அளவில் வசூல் செய்யவும் நிர்வாகத்திற்கு என்னால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு நான் முழுப் பொறுப்பு ஏற்க சம்மதிக்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

6. சங்கங்கள், பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து பால் ஏற்றும் / இறக்கும் மையங்கள், கேன் மற்றும் காலி கேன்களை வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தமது சொந்த செலவில் நபர்களை ஒப்பந்தக்காரர் நியமித்துக் கொள்ளவும், மேலும் பால் கேன்கள், காலி கேன்கள் போன்றவை மிகவும் கவனத்துடன் கையாளப்படவும், அசிரத்தையால் பாலுக்கோ, பால்கேனுக்கோ ஊறுகள் ஏற்பட்டால் ஒப்பந்தகாரராகிய நானே முழு பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

7. சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலின் அளவு, கேன்கள் எண்ணிக்கை மற்றும் நேரம் முதலியவற்றை சம்பந்தப்பட்ட எடை சீட்டில் சங்க அலுவலரே பூர்த்தி செய்ய வேண்டும் என்பதையும் எக்காரணத்தைக் கொண்டும் வண்டி ஓட்டுனரோ, கிளீனரோ பூர்த்தி செய்யக் கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

8. ஒப்பந்தக் காலத்தில் பால் வழித்தடத்தினை மாற்றி அமைக்கவோ, தடத்தின் தூரத்தை கூட்டவோ, குறைக்கவோ இவ்வொன்றியத்திற்கு முழு உரிமை உண்டு என்பதையும் மாறுதல் குறித்து விபரம் கிடைத்தவுடன் உத்தரவிற்கு இணங்க வாகனம் இயக்க ஒப்புக் கொள்கிறேன்.

9. ஏதாவது காரணங்களால் சங்கத்திலோ / சங்கங்களிலோ பாலை எடுத்து வரத்தவறி சங்கத்தின் பெரு நோக்குடன் தமது பொறுப்பில் குளிரூட்டும் நிலையம், பால் பண்ணையில் கொண்டு வந்து சேர்க்க முயற்சித்து பால் கெட்டுப் போகும் தருணத்தில் பாலின் கிரயம் மற்றும் சங்கத்தினரால் செலவழிக்கப்படும் செலவு ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பேற்க நேரிடும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

10. ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தேவையான கேன்கள் ஒப்பந்தக்காரரிடம் அவ்வப்பொழுது ஒப்படைக்கப்படும் என்பதையும், ஒன்றியத்தின் பொருட்களான பால் கேன் மற்றும் இதர இனங்கள் போன்றவற்றிற்கு சரியான கணக்குகள் வைத்திருக்க வேண்டுவதுடன் சங்கங்களிலிருந்து பால் சேகரம் செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் ஒப்பந்தக்காரரையே சேரும் என்பதையும், சங்கங்களிலிருந்தும், ஒன்றியத்திலிருந்தும் எடுத்து வரும் கேன்கள் மற்றும் மூடிகளையும் தங்கள் பொறுப்பில் எடுத்து வந்து மீண்டும் ஒன்றியத்திலும், சங்கங்களிலும் ஒப்படைக்க வேண்டும் என்பதையும், குறைவு கேன்களுக்கும், மூடிகளுக்கும் ஒன்றியம் நிர்ணயிக்கும் தொகையினை டெண்டர்தாரர் வாடகைப் பட்டியலில் பில்லில் பிடித்தம் செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

11. பால் வழித்தடங்களின் மூலம் சங்கங்கள், ஒன்றிய பாலகங்கள், விற்பனை இடங்கள் ஆகியவற்றிற்கு ஒன்றியத்தில் இருந்து அனுப்பப்படும் கலப்பு தீவன மூட்டைகள் பரிசோதனைக் கருவிகள், இரசாயனப் பொருட்கள், தபால்கள், பதிவேடுகள் மற்றும் காசோலை போன்றவைகளையும், பால் பாக்கெட்டுகளை / பால் உபபொருட்களை காலை / மாலை இரு வேளைகளிலும் ஒன்றியத்திலிருந்து எடுத்துச் சென்று பூத்துகளில் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் இவற்றிற்கு தனிக் கட்டணம் கிடையாது என்பதையும் மேற்படி பொருட்களுக்கு வண்டி செல்லும்போது ஏதாவது சேதம் ஏற்படுமாயின் சேதமடைந்த பொருட்களின் கிரயம் ஒப்பந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

12. நிர்வாக காரணமாக பால் பண்ணை / பால் குளிரூட்டும் நிலையங்களுக்கிடையே பாலினைக் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் அவ்வித மாற்று வழித்தட ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்கிறேன் என்றும் அதற்காக வாடகைக் கட்டணம் ஒப்பந்தப்புள்ளிகளில் கொடுக்கப்பட்டுள்ளத் தொகைக்கு ஒப்புக் கொள்கிறேன். ஒப்புக்கொள்ள மறுக்கும் பட்சத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டால் அதற்கான முழுச் செலவுத் தொகையையும் ஏற்றுக் கொள்ளவும் ஒப்புக் கொள்கிறேன்.

13. ஒப்பந்த வாகனம் இயக்குவது சம்பந்தமாக ஒன்றியம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் கொடுக்கும் பாலின் அளவு / தரம் ஆகியவற்றிற்கும் பின்பு அவை ஒன்றிய குளிரூட்டும் நிலையம் / பால் பண்ணை வந்து சேரும்பொழுது அதற்கு இடைப்பட்ட நேரத்தில் சங்கங்களிலிருந்து அனுப்பப்பட்ட நிலைமைக்கு மாறுபட்டு பாலுக்கு ஏற்படும் தரம் / அளவு ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரராகிய நானே முழுப் பொறுப்பாவேன். அவ்வாறு பால் அளவு / தரம் குறைவு ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரரே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பால் வழித்தடத்தில் ஏற்பட்ட ஒப்பந்த காலம் முழுவதற்கும் நானே முழுப் பொறுப்பானவர் என்று நிர்ணயிக்கப்பட்டு அதற்கு உண்டான முழு நட்டத் தொகையையும் என்னிடமிருந்து வசூலிக்கப்படும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

14. பொது வேலை நிறுத்தம், அரசு வேலை நிறுத்தம், கலகம், வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களால் போக்குவரத்து பாதிக்கப்பட்டாலும், பால் சேகரத்திற்கான மாற்று வழிகளை கடைப் பிடித்து பால் சேகரம் / விற்பனைக்கு எந்த பாதகமும் இன்றி செயல்படுவது எனது கடமை என ஒப்புக் கொள்கிறேன்.

15. மாநில மற்றும் மத்திய அரசுகளின் போக்குவரத்து விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாகனத்தை பராமரிப்பது மற்றும் சரியாக ஓட்டுவது போன்றவை ஒப்பந்தக்காரரின் சொந்தப் பொறுப்பாகும் என்பதையும் மேற்கண்ட விதிகளில் தவறினால் ஒன்றியத்தினை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதையும் விதிகள் சரிவர கடைப்பிடிக்காமல் அதனால் வண்டி தாமதப்பட நேர்ந்து பால் கெட்டு விட்டாலும் பாலின் கிரயத் தொகைக்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பேற்க நேரிடும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

16. ஒவ்வொரு முறை பாலை ஏற்றி பண்ணை / குளிரூட்டும் நிலையத்தில் சேர்த்த பின்னும் வண்டி சுத்தமாக கழுவப்பட்டு நன்கு துடைக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலின் அளவு, தரம் முதலியவற்றிற்கான எடை சீட்டை ஒன்றியத்திலிருந்து பெற்று சங்கங்களில் சேர்ப்பதும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதையும், வாகனத்தில் உட்பகுதியில் விளக்கு பொறுத்தப்பட்டு உள்ளிருக்கும் கேன்கள் மற்றும் இதரப் பொருட்கள் முறையாக இழப்புக்கு இடமின்றி கையாளப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

17. ஒப்பந்த வாகனம் இயக்கும்போது சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மற்றும் வாகன உதவியாளரைத் தவிர ஒப்பந்த வாகனத்தாரர் பொறுப்பில் வேறு யாரும் பயணம் செய்தல் கூடாது என்பதையும், வாகனத்தில் எவ்விதத்திலாவது சங்கங்களில் இருந்து அனுப்பப்படும் பாலுக்கான தரம், அளவு குறைவு, ஒன்றிய கௌரவ நிகழ்வுகள் ஏற்பட காரணமாக இருந்ததற்கான காரண காரணங்களுக்கான முகாந்தரம், விசாரணை முடிவுகள் தெரிய வந்தால் அதற்கான இழப்புக்கு, பொறுப்புக்கு, அபராதம் என நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கும், ஒப்பந்தத்தை இரத்து செய்வது போன்ற நடவடிக்கைக்கும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

18. ஒன்றியத்தைச் சேர்ந்த ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த பொருட்கள் தவிர பிற நபர்களோ, பொருட்களோ சட்டவிரோதமான பொருட்களோ, போதை பொருட்களோ பால் வண்டியில் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றக் கூடாது என்பதையும், தவறினாலோ இது பற்றி நேரில் ஒன்றிய அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டாலோ அன்றைய தின வாடகைப் பணம் பெறும் தகுதியை ஒப்பந்தக்காரர் இழக்க நேரிடும் என்பதையும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

19. ஒப்பநந்தக்காரரின் ஒப்பந்தம் ஏதாவது காரணங்களால் ரத்து செய்யப்பட்டால் நட்ட ஈடோ மற்ற ஈட்டுத் தொகை கோர ஒப்பந்தக்காரருக்கு உரிமை கிடையது என்பதையும் இனி இது பற்றி வழக்கு தொடரவும் உரிமை கிடையாது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

20. எதிர்பாராதவிதமாக வண்டி பழுதடைந்து விட்டால் மாற்று ஏற்பாடு செய்து உரிய காலத்தில் பால் சேகரம் செய்து நல்ல நிலையில் கெட்டுப் போகாமலும் ஒன்றியத்தின் கௌரவம் பாதிக்காமல் வாகனம் இயக்குவது / மற்றும் கால்நடை மருத்துவ வழித்தடத்தினை பாதிப்பின்றி செயல்படுவதற்கு எனது முழுப் பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மேலும் விபத்து மற்றும் நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும் தகுந்த காரணங்கள் தவிர, ஒப்பந்ததாரரின் வசதிக்கேற்ப மாற்று வாகனத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் பட்சத்தில் மறு முடிவு செய்யப்படும் வரை வாடகை கேட்பிணையில் அபராதத் தொகையாக 15 தினங்களுக்கொரு முறை ரூ. 500.00 பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

21. பாதுகாப்பு வைப்புத் தொகையாக ரூ. 20000.00 ஒப்பந்தம் பெறும் வாகனத்துக்கு செலுத்தப்பட வேண்டும் என்பதையும் இத்தொகை ஒப்பந்தக் காலம் முடிந்து ஆறு மாத காலத்திற்கு பின் 50% தொகையும் மீதித் தொகை ஒன்றியத்தில் ஒப்பந்தக்காரருக்கான கணக்கு நேர் செய்யப்பட்டு அவ்வாண்டு இறுதித் தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை வெளியிட்ட பின்புதான் திருப்பித் தரப்படும் என்பதையும் வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

22. பால் வண்டியின் கிளீனர், வண்டியில் பின்புறம் அமர்ந்து வரவும், பால் கேன்கள் வண்டி ஓட்டத்தின்போது கவிழ்ந்து பால் சேதாரம் ஏற்பட்டு விடாமல் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது எனது பொறுப்பு என்பதையும் ஒன்றியத்தின் அலுவலர்கள் மற்றும் சங்க சிப்பந்திகளிடம் வண்டியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் நாகரீகமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும் ஏ்ன்பதையும் அவர்களது நடத்தை சரியில்லையெனக் கருதி குறிப்பிட்ட நபர்களை பால் வண்டியில் செல்ல அனுமதிக்கக் கூடாது என உத்தரவிட ஒன்றியத்திற்கு உரிமை உண்டு என்பதையும் ஒன்றிய உத்தரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றியமைக்க ஒப்பந்தக்காரராகிய நான் ஒப்புக் கொள்கிறேன்.

23. மேற்கண்ட விதிகளுக்கு அப்பாற்பட்ட எல்லாவித நிகழ்ச்சிக்கும் ஒன்றியத்தின் முடிவே இறுதியானவை என்பதை ஒப்பந்தக்காரர் அவற்றிற்கு கட்டுப்பட்டே செயல்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

24. பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் அளிக்கப்பட மாட்டாது என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

25. சட்ட ரீதியான நடவடிக்கைகள் தூத்துக்கடி மாவட்டத்தின் சிவில் நீதி மன்றங்கள் மூலம் அல்லது 1983-ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 39-ன் பிரிவு 90-ன் கீழும் அதற்கென ஏற்படுத்தப்பட்ட 1988-ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 107-ன் படியும் துணைப்பதிவாளர் (பால்பதம்), தூத்துக்குடி அவர்களின் நீதிமன்ற தீர்ப்புக்குட்பட்டவை என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

26. ஒன்றிய சிப்பந்திகள் இவ்வொப்பந்தத்தில் பங்கேற்க முடியாது என்பதையும், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் ஒப்பந்தம் நிராகரிக்கப்படும் என்பதையும் அதற்கான ஒழுங்கு நடவடிக்கைக்கு கட்டுப்படவும் சம்மதிக்கிறேன்.

27. ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்த டெண்டர் நிபந்தனைகளை மீறும்போது ஒன்றியத்திற்கு திருப்திகரமாக இல்லையென்க் கருதினாலும் அல்லது நிர்வாக காரணங்களை முன்னிட்டும் ஒன்றியத்தில் பொது மேலாளரால் டெண்டர் ரத்து செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

28. ஒப்பந்தக் காலத்தில் மேற்கண்ட நிபந்தனைகளை மீறும்போது டெண்டரை ரத்து செய்யவும் பால் மேம்பாட்டுத்துறை அல்லது அரசு / ஒன்றியத்தின் உத்தரவின் பேரில் ஏதாவது பால் வழித்தடம் ரத்தாகும்போது ஒப்பந்தம் ரத்தாகும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

29. காரணத்தை தெரிவிக்காமலும், முன் அறிவிப்பு கொடுக்காமலும் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஒன்றிய பொது மேலாளருக்கு பூரண உரிமை உண்டு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

30. ஒப்பந்த காலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒப்பந்த ஊர்தியினை ஒப்பந்தக்காரர் ஒப்பந்தக் காலத்தில் அல்லது ஒன்றியம் அறிவிக்கும் காலத்திற்குள் நிறுத்திக் கொண்டால், டெண்டர்தாரர் தனது பாதுகாப்புத் தொகையை இழப்பதுடன் மறு டெண்டருக்கு ஆகும் செலவும், மறு ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொண்டு அப்பால் வழித்தடத்திற்கு வாகனம் செலுத்தும் காலம் வரை டெண்டர் ரேட்டுக்கு மேலாகும் செலவுத் தொகைக்கு பழைய டெண்டர்தாரரே பொறுப்பாகும் என்பதையும், இந்நட்டம் இந்த டெண்டர்தாரருக்கு சேர வேண்டிய பணத்தில் ஈடு செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மீதி வசூலிக்க வேண்டிய தொகை இருப்பின் பாரா 25-ல் கூறப்பட்டவாறு சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொண்டு வசூலிக்கவும் ஒப்புக் கொள்கிறேன்.

31. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒப்பந்த குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் இருந்தால் டேவணித் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தத்துக்கு ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவையும் நானே ஏற்க வேண்டும் என்பதையும் ஒப்பந்தத்தை பிறருக்கு விட்டுக் கொடுத்தாலோ டேவணித் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தம் மேற்கொள்ள ஆகும் செலவினையும் ஒப்பந்தம் எடுத்தவரே ஏற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

32. ஒப்பந்த உத்தரவின் அட்டவணைப்படி பால் வழித்தட சங்கங்களில் பாலை சேகரிப்பதும் ஒப்படைப்பதும் அதற்கான அத்தாட்சிகள் பெற்ற சங்கங்கள் மற்றும் ஒன்றியத்தில் ஒப்படைப்பதும் ஒப்பந்தக்காரரின் முழுப் பொறுப்பாகும் என்பதையும், வழித்தட வாகனத்தின் ஓட்டுனர் அல்லது நடத்துனர் மூலம் சங்கங்கள் பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பண்ணை ஆகியவற்றிற்கிடையே பட்டுவாடா செய்யப்படும் தபால்களுக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

33. உத்தரவில் தெரிவிக்கப்பட்ட அட்டவணைப்படி பால் பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் பால் சேகரம் செய்து வந்தடைந்த நேரம் அவ்வப்போது வண்டி உரிமையாளர் மற்றும் ஓட்டுனர்களால் பராமரிக்கப்பட்டு வரும் (ஜி.வி.ஆர்) பொது வாகன பதிவேட்டில் பின்புறத்தில் குளிரூட்டும் நிலைய அலுவலர் அல்லது பொறுப்பான அலுவலர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படும் என்பதையும் பொது வாகன பதிவேட்டில் (ஜி.வி.ஆர்) ஊர்தி ஓட்டனர் காலையிலும் / மாலையிலும் புறப்படும் இடம், வந்தடையும் இடம், தூரம், ஒப்பந்த வண்டி எண், ஏற்றப்படும் பொருட்கள் (பால்) பாலின் எடை, ஊர்தி உரிமையாளர் பெயர் குறிப்பிட வேண்டும் என்பதையும், வாடகை பட்டியல் அனுப்பும்போது ஜி.வி.ஆர். நகல்கள் இணைக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

34. ஒப்பந்தத்தில் கலந்து கொள்பவர்கள் கொடுத்திருக்கும் ஒப்பந்த விலைப்புள்ளிகள் அதிகமாக இருப்பின் ஒன்றிய நலனைக் கருதி ஒப்பந்தக்காரரிடம் ஒப்பந்தப் புள்ளிகளை குறைத்து பேரம் பேசுவதற்கு ஒன்றிய பொது மேலாளருக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட குழுவுக்கோ அதிகாரம் உண்டு என்பதையும், இது தொடர்பாக பொது மேலாளரின் முடிவே இறுதியானது எனவும் ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

35. ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதற்கு இணங்க ஒப்பந்த நிபந்தனைகள் அடங்கிய ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட்டு ஒப்பந்தம் கொடுக்கும்போது அதை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

36. சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்படும் சுங்க வரிக்கு ஒப்பந்தக்காரர் பொறுப்பாவார் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

37. ஒன்றியத்தில் ஒப்பந்தம் பெறப்பட்டு, ஒப்பந்த வாகனம் இயக்குவது சம்பந்தமாக ஒன்றியத்திற்கு திருப்திகரமாக இல்லாமல் இருப்பின், ஒருமாத அறிவிப்பு கொடுத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்பதையும் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்த வாகனம் தேவையில்லை என ஒன்றியம் கருதும்போது ரத்து செய்யப்படலாம் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

38. ஒப்பந்தம் செய்யப்பட்ட இலகு ரக சரக்கு வாகனம் எந்த வகையான வண்டி என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோ, அதைத்தான் ஒப்பந்த காலம் முடியும் வரை குறிப்பிட்ட ஒப்பந்த வழித்தடத்தில் ஓட்ட வேண்டும் என்பதையும் இதை மீறினால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

39. ஒப்பந்த இடைக்காலத்தில் அல்லது ஒன்றியம் நிர்ணயம் மேற்கொள்கிற காலக்கெடு சூழ்நிலைகளில் அரசு டீசல் விலையை உயர்த்தி / குறைத்து நிர்ணயம் செய்யும் சூழ்நிலைகளில் போக்குவரத்துக் கட்டணம் சம்பந்தமாக மாறுபடும் விலைக்கு ஏற்ப வாடகை கூடவோ / குறையவோ நிர்ணயம் செய்வதை ஏற்று ஒப்புக் கொள்கிறேன்.

40. ஒப்பந்தப்படி நிர்ணயிக்கும் ஒப்பந்தப் புள்ளி தொகைக்கே பால் சேகர வழித்தடம் ஆரம்பிக்கும் நாள் முதல் ஒப்பந்தக் காலம் முடியும் வரையும் அல்லது நிர்வாகக் காரணங்களால் கால நீடிப்பு கொடுத்து செயல்பட தெரிவிக்கும் காலம் வரை அதே ஒப்பந்தப்புள்ளியின் தொகைக்கே ஊர்தியை இயக்க முழு மனதுடன் சம்மதிக்கிறேன்.

41. ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒன்றிய பொது மேலாளரால் ஒப்பந்த இறுதி ஆணை வழங்கப்பட்டப் பின் ஒன்றியம் கொடுக்கும் கால கெடுவுக்குள் ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்காமலும், வாகனம் இயக்காமலும் இது சம்பந்தமாக ஒன்றியத்துடன் ஒத்துழைக்க மறுத்தாலும் அவர் ஒப்பந்த விதிகளில் கையொப்பம் இட்டபடி அவர் மேல் எல்லாவித நடவடிக்கை எடுக்கவும் இதனால் ஒன்றியத்திற்கு ஏற்படும் அனைத்து நிதி மற்றும் நிர்வாகப் பிரச்சனைகளுக்கு ஒன்றியம் நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

42. தற்காலிக ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டு அதனை நிறைவு செய்யாத பட்சத்தில் முன்வைப்புத் தொகையை இழக்கவும், அதனால் ஒன்றியத்திற்கு ஏற்படும் அனைத்து இழப்பீடுக்கும் பொறுப்பு ஏற்க ஒப்புக் கொள்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

43. ஒப்பந்தம் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரர் ரூ. 100/-க்கான மதிப்புள்ள பத்திரத்தில் ஒன்றியத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட ஒப்பந்த வாகனத்துக்கான தற்காலிக ஆணை வழங்கப்பட்ட 15 தினங்களுக்குள் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் ரூ. 100/- க்கான ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்ட ஒப்பந்த விதிமுறைகளுக்கான பத்திரம் ஒன்றியத்துடன் மேற்கொண்டு நிறைவு செய்து இறுதி ஆணை பெறப்படல் வேண்டும். அதன் பின்னரே தங்களுக்கான ஒப்பந்தக் கட்டணம் வழங்கப்படும்.

44. ஒப்பந்தம் ஏற்றுக் கொண்ட ஒரு மாதத்திற்குள் காப்புத் தொகையை ரூ. 10,000/- ஒன்றியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

45. வழித்தடத்தில் அட்டவணைப்படி முழுமையாகவோ, பகுதியிலோ வாகனம் சங்கங்களில் பால் சேகரம் செய்யாமல் விட்டு வந்தால் பாலுக்குண்டான கிரையம் வாடகைப் பணத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு சங்கத்திற்கு வழங்கப்படும். மேலும் ஓடாத தூரத்திற்கு இரு மடங்கு வாடகைப் பணம் அபராதமாக வசூலிக்கப்படும் என்பதையும், இது தொடர்பாக சங்கத்திற்கோ, ஒன்றியத்திற்கோ ஏற்படும் நிதி, நிர்வாகம், கௌரவம் ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

46. கடிதப் போக்குவரத்து அனைத்தும் பொது மேலாளர், தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தூத்துக்குடி-2 என்ற முகவரி இடப்பட வேண்டும்.

47. ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நேரங்கள் ஒன்றிய அலுவலகக் கடிகார நேரத்தையேக் குறிக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

48. தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அசோசியேட் மெம்பராக அதற்குரிய தொகையை ரூ. 10.00 செலுத்த சம்மதிக்கிறேன்.

49. எங்களுக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்ட பால் வழித்தடத்திலிருந்து தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் குறிப்பிட்ட உரிய காலத்தில் பால் எடுத்து வந்த பிறகு வழித்தடத்திலிருந்து ஏற்கனவே மேல் கூறப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு பாலை எடுத்து வர உத்தரவிட தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு உரிமை அளிக்கிறேன்.

50. எங்களுக்கு வழங்கப்பட்ட பால் வழித்தடத்தில் பால் கொள்முதல் செய்ய செல்லும் போதோ, வரும்போதோ மோட்டார் வாகன பராமரிப்பு சட்டத்தினால் (எம்.வி.ஆக்ட்) சுமை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள எடைக்குட்பட்டு பால் வினியோகத்திற்காக பாலையும் எடுத்துச் சென்று வினியோகம் செய்ய மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு உத்தரவிட தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு முழு உரிமை அளிக்கிறேன். மேலும் தொழிலாளர் சட்டம் மீறப்பட்டாலும் அதன் மீது உத்தரவு பிறப்பிக்க ஒன்றியத்திற்கு முழு உரிமை அளிக்கிறேன்.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**

51. பொது மேலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் ஒரு தடவை பால் சேகர வழித்தடத்தில் தூரம் எடுத்த பின் மறுபடி எடுக்க ஒப்பந்தக்காரர் கோரும் பட்சத்தில் அதற்கான முழு செலவுத் தொகையையும் ஒப்பந்தக்காரரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

52. தாங்கள் தங்கள் வாகனத்தைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நிறுத்த நேரிட்டால், தாங்களே டெண்டரில் கோரிய அனைத்து தகுதிகளையும் கொண்ட வாகனத்தை மாற்று ஏற்பாடு செய்து அந்த வாகன உரிமையாளருக்கு மீதமுள்ள காலத்திற்கு ஓட்ட உரிமை வழங்கப்படும் என்றும், தாங்கள் செலுத்திய காப்புத் தொகை நிறுத்தி வைக்கவும், புதிய நபர் காப்பீட்டுத் தொகை முழுவதையும் செலுத்த ஒப்புக் கொள்கிறேன்.

53. ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒரு ஒப்பந்த வாகனத்தை வைத்து ஒரு வழித்தடத்தில் மட்டுமே பால் சேகரம் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

54. ஒன்றியத்திலிருந்து வழங்கப்பட்ட கால நேர அட்டவணையின்படி சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும் மீறினால் அபராதம் விதிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

மேற்கண்ட நிபந்தனைகள் வரிசை எண் 1 முதல் 54 வரை முழுமையாக படித்து அறிந்து என் சுய நினைவுடன் கையொப்பமிட்டுள்ளேன்.

சாட்சிகள்:

1.

2.

**ஒப்பந்தக்காரர் கையொப்பம்**